பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 07 ஞாயிற்றுக்கிழமை 24.10.2021 கதிர் 216

## வவுனியா விபத்தில் இளைஞன் படுகாயம்

வவுனியா நகரப் பகுதியில் இன்று மதியம் இராணுவ பிக்கப் வாகனமும் மோட்டர் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்தார். அவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

2



## மஹிந்தானந்தவின் கொடும்பாவி சஜித்தின் ஆர்ப்பாட்டத்தில் எரிப்பு

அம்பாந்தோட்டை - லுணுகம்வெஹரவில் நடைபெற்ற கொவி ஹதகெஸ்ம நிகழ்ச்சி மற்றும் விவசாயிகளின் ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ கலந்துகொண்டார்.

அங்கு சென்ற அவர், அப்பகுதி விவசாயிகளைச் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நீண்ட நேரம் கலந்துரையாடினார்.

சஜித்தின் முன்னிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள், விவசாய அமைச்சர்

2



# ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கு மட்டுமேதான் நாளை பாடசாலை

## ஏனையோருக்கு இல்லை என்கிறது தொழிற்சங்கம் புதிய வடிவில் போராட்டம் தொடரும் என அறிவிப்பு

**கொழும்பு,ஒக்ரோபர்24**

**நாளைய தினம் பாடசாலைகள் ஆரம்பமாகும் நிலையில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் மட்டும்தான் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டும். ஏனைய ஆசிரியர்கள் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.**

2



## பாலைதீவில் இருந்து மணல் படகுகள் மூலம் கொள்ளை!

### 3 படகுகளுடன் எண்மர் சிக்கினர்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.24

கிளிநொச்சி மாவட்டம் பாலைதீவுப் பகுதியில் இருந்து படகு வழியாக மணல் திருட்டில் ஈடுபட்ட எட்டுப் பேர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாலைதீவில் இருந்து மணல் அகழப்பட்டு, மூடைகளாகப் பொதி செய்யப்பட்டு, களவாடப்படுவதாக கடற்படையி

2



## கஜேந்திரனுக்கும் தொற்று உறுதி

(ந.லோகதயாளன், கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஒக்.24

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திர

2

## நுவரெலியாவில் வெள்ளம்



(பி.கேதீஸ்)

தலவாக்கலை,ஒக்.24

நேற்று சனிக்கிழமை மாலை பெய்த கடும் மழையினால் நுவரெலியா மற்றும் கந்தபொல பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் நுவரெலியா, கந்தபளை

2

## நல்லூர் நிர்வாகி பொறுப்பை குமரேஷ் மாப்பாணர் ஏற்றார்!



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பதினோராவது நிர்வாக அதிகாரியாக குமரேஷ் யந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியார் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலய பத்தாவது நிர்வாக அதிகாரியான குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியார் கடந்த 09ஆம் திகதி இறைபதமடைந்தார்.

அன்றைய தினம் தொடக்கம், குமரேஷ் யந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் நிர்வாகக் காலம் ஆரம்பமானது.

2

### ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில்

## உசிதமான நடவடிக்கையை எடுக்க கர்தினாலுக்குப் பாப்பரசர் அனுமதி



ஏப்ரல் 21 இல் இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சரியென நினைக்கும் சிறந்த விடயத்தைச் செய்யுமாறும், தாம் விசுவாசித்து செய்ய வேண்டிய நல்ல விடயத்தை கூறுமாறும் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ், தமது கையெழுத்தில்

2

## ஆரம்பப் பிரிவு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி அமைச்சின் சுற்றறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளதாக தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆசிரியர்களும், அதிபர்களும் நாளை திங்கட்கிழமை பாடசாலைகளுக்குச் சமுகமளித்தாலும் பிற்பகலில் அனைத்துப் பாடசாலைகளுக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒரு பகுதியிலிருந்து பயணத்தடையைக் கடந்து ஆசிரியர்கள் பயணிக்க முடியாது. இதனால் பயணத்தடை நீக்கப்படும் வரையில் பயணத்தடையைத் தாண்டி ஆசிரியர்கள் எவரும் பயணிக்கவேண்டிய அவசியமில்லை.

இதேவேளை, நாளை நாடளாவிய ரீதியில் பாரிய ஆர்ப்பாட்டங்களுக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆர்ப்பாட்டங்களில் அனைவரும் பங்குகொள்ளவேண்டும்.

நாளையிலிருந்து புதிய வடிவத்தில் எமது தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

அதன் அடிப்படையில் -

- ஆசிரியர் மற்றும் அதிபர்கள் கடமைகளுக்காக தங்களுடைய தனிப்பட்ட தொடர்பாடல் உபகரணங்களை பயன்படுத்துவதைத் தவிர்ப்பது.
- காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 வரை மாத்திரம் அதிபர்கள் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
- காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 மணி வரை மாத்திரமே மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பில் பொறுப்புடையவராதல்.
- வசதிகள் வழங்கப்படும் வரையில் இணையவழிக் கற்பித்தலில் இருந்து விலகி இருத்தல்.
- ஆசிரியர் மற்றும் அதிபர்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும், அரச விடுமுறை தினங்களிலும் கடமைகளில் ஈடுபடாதிருத்தல்.
- ஆசிரியர் மற்றும் அதிகாரிகள் வாரநாள்களில் காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 வரை கற்பித்தல் நடவடிக்கைகளில் மாத்திரம் ஈடுபடல் (வெளி நிறுவனங்களில் இருந்து வரும் கடமைகள், பாடசாலைகளின் வெவ்வேறு வேலைத்திட்டங்கள், அடையாள அட்டை தயாரித்தல், சுகாதாரப் பிரிவு நடவடிக்கை, வேலைத்திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், வலய மற்றும் கோட்ட காரியங்களுக்கு தகவல்களை வழங்குதல், தர ஆவணங்களை தயார் செய்தல், வருடாந்த மற்றும் ஐந்தாண்டு திட்டங்களை தயாரித்தல், பொருள்கள் மதிப்பாய்வு, பாடசாலை கல்விச் சுற்றுலா மற்றும் வேலைத் திட்டங்களுக்காக அழைத்துச் செல்லல், பாடசாலை அபிவிருத்திக் குழுக்கூட்டத்தை நடத்துதல் போன்ற எந்த நடவடிக்கையிலும் ஈடுபடுவதை தவிர்த்தல்)

-போன்ற விடயங்களை நடைமுறைப்படுத்துவோம்.

அரசாங்கத்துக்கு நாங்கள் தெரிவிப்பது என்னவென்றால், எங்கள் பிரச்சினைகளுக்கான தீர்வு ஒரே கட்டத்தில் எட்டப்படவேண்டும். அதுவரை எமது போராட்டம் தொடரும். - என்றும் தெரிவித்தனர்.

## நல்லூர் நிர்வாகி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் இன்றைய தினம் காலை குமரேஷ் யந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியார் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சென்று விசேட பூஜை வழிபாட்டில் கலந்து கொண்டிருந்தார்.

பத்தாவது நிர்வாக அதிகாரியான குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியார் 1964 டிசெம்பர் 15 முதல் கடந்த 09ஆம் திகதி அவர் இறைபதமடையும் வரை நிர்வாக அதிகாரியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நுவரெலியாவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய பிரதேசங்களில் காணப்படும் விவசாய நிலங்களில் வெள்ளநீர் நிரம்பியது. இங்குள்ள வர்த்தக நிலையங்களிலும் வெள்ளநீர் புகுந்ததால் வியாபாரமும் பாதிக்கப்பட்டது. வீதிகளில் வெள்ள நீர் நிரம்பியதால் போக்குவரத்தும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

## மஹிந்தானந்தவின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்தானந்த அளுத்கமகேயின் கொடும்பாவியை வீதியில் இழுந்துச் சென்ற தீயிட்டுக் கொழுத்தினர்.

## கஜேந்திரனுக்கும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற அமர்வில் பங்கு கொண்ட நிலைமையில் யாழ்ப்பாணம் திரும்பியிருந்தார். நேற்று காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட அவர் இன்று காலை யாழ்ப்பாணம். சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலில் அன்டிஜன் பரிசோதனை மேற்கொண்டார். அப்போது தொற்று உறுதிசெய்யப்பட்டதனால் வீட்டிலேயே அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இன்று காலை தனது முகப்புத்தகத்தில் இவ்விடயங்களை அவர் தெரிவித்துள்ளார்.

## வவுனியா விபத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் இருந்து ரயில்வே வீதி நோக்கி மோட்டார் சைக்கிள் ஒன்று சென்று கொண்டிருந்த போது, மக்கள் வங்கி முன்பாக நின்ற இராணுவ பிக்கப் ரக வாகனம் வீதியில் திடீரென திரும்ப முற்பட்ட வேளை மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பில் வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகள் முன்னெடுத்துள்ளனர்.

## உசிதமான .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

இந்தத் தாக்குதல் குறித்து தாம் கவலையடைகிறார் எனவும் அது தொடர்பாகத் தாம் பிரார்த்திக்கின்றார் எனவும் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தாம் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## பாலைதீவில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் பேரில் நேற்றுக் காலை கடற்படையினர் அப்பகுதியை முற்றுகையிட்டனர்.

இதன்போது 3 படகுகளில் மண்பொதி செய்யப்பட்டு, படகில் ஏற்றப்பட்ட நிலையில் படகுகளை கைப்பற்றிய கடற்படையினர் அந்த மணலை ஏற்றிய எண்மரையும் கைது செய்து ஜெயபுரம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதேநேரம் இவ்வாறு தீவில் களவாக ஏற்றப்பட்ட மணல் எங்கு எடுத்துச் செல்லப்படுகின்றது என்பது தொடர்பில் விவரம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.






## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# நீதிமன்றில் ராஜதந்திர சிக்கல்

சர்வதேச ரீதியிலான நடவடிக்கை ஒன்று தொடர்பில் அல்லது இராஜதந்திர செயற்பாடு தொடர்பில் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு உயர்நீதிமன்றத்தை இலங்கை அரசு நாடுகின்றது என்றால், மறுபுறத்தில் அதே போன்ற இன்னொரு சர்வதேச ராஜதந்திர விவகாரத்தில் இலங்கை அரசை மாட்ட வைப்பதற்கு பிறிதொரு தரப்பு அதே உயர்நீதிமன்றத்தில் முறையிடுகின்றது.

நாட்டில் முழு அளவிலான அசேதன இரசாயன உரங்கள் மற்றும் களைக்கொல்லிகளுக்கு திடுதிப்பென, ஒரேயடியாக, முழு அளவில் தடை விதித்தது கோட்டாபய அரசு. அதனால் ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிப்பதற்காக லட்சக்கணக்கான தொன் சேதன உரத்தை அவசர அவசரமாக இறக்குமதி செய்ய முயன்றது அரசு. அதன் பிரகாரம் விலைமனுக்கள் கோரப்பட்டு, சீன நிறுவனம் ஒன்றுக்கு 100 கோடி ரூபா பெறுமதியான ஓடர் கொடுக்கப்பட்டது.

தனது சேதன உரத்தின் மாதிரியைக் கொழும்புக்கு அனுப்பிய சீன நிறுவனம், வழங்கப்பட வேண்டிய மொத்த உரத்தில் ஒரு பகுதியை கப்பலில் ஏற்றி இலங்கை நோக்கி அனுப்பி வைத்தது.

இதற்கிடையில் அந்த மாதிரியைச் சோதித்த இலங்கையின் 'தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை' அமைப்பு அதில் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய நுண்ணுயிரிகள் இருக்கின்றன என அறிவித்தது. அதை அடுத்து அந்த உரத்தை ஏற்பதில்லை என்ற தீர்மானத்திற்கு அரசு வந்தது. ஆனால் கப்பலில் வந்து கொண்டிருக்கும் உரத்தை ஏற்று, அதற்குரிய கொடுப்பனவை வழங்குமாறு சீன நிறுவனம் வங்கி மூலம் அழுத்தம் கொடுத்தமையால் உயர் நீதிமன்றத்திற்குச் சென்றது இலங்கை அரசு. மேற்படி நாட்டுக்காக சீன நிறுவனத்துக்கு எந்தக் கொடுப்பனவையும் செலுத்துவதற்கு நீதிமன்றத்திடம் இருந்து இடைக்காலத் தடை உத்தரவு பெற்றுள்ளது இலங்கை ஆட்சித் தரப்பு. இந்த விவகாரம் இலங்கை – சீன அரசுக்கு இடையிலான கொடுக்கல் – வாங்கல் விடயங்களில் முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்கள் தெரிகின்றன.

இதேசமயம், கெரவலப்பிட்டி யுகதனவி மின் வலு நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்க அதிரடியாக கோட்டாபய அரசு எடுத்த முடிவை ஆட்சேபித்து இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் தொழிற்சங்கம் உயர்நீதிமன்றத்திற்குப் போயிருக்கின்றது. இந்தப் பங்குகளை மாற்றுவதற்கு இலங்கை அரசு செய்து கொண்டது சட்ட முறையற்ற ஒப்பந்தம் என்று தெரிவித்து, அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்து இருக்கிறது அந்த அமைப்பு.

இந்த நிலையத்துக்கு திரவ இயற்கை எரிவாயுவை விநியோகிப்பது தொடர்பான சட்ட ரீதியான கேள்விப் பத்திர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு கொண்டிருக்கையில், அந்த நடவடிக்கையை முறையற்ற விதத்தில் இடையில் முறித்துக்கொண்டு, குறுக்கு வழியில் மேற்படி அமெரிக்க நிறுவனத்தோடு பின்கதவால் இரகசியமாக – அவசர அவசரமாக – கொழும்பு அரசு இந்த ஒப்பந்தத்தைச் செய்திருப்பதாக அந்தத் தொழிற்சங்கம் தனது மனுவில் தெரிவித்துள்ளது.

சீனாவின் சேதன உரத்தை ஏற்றிவரும் கப்பலுக்கான கொடுப்பனவை தடுத்து நிறுத்துவதற்கு உயர் நீதிமன்றம் மூலம் இலங்கை அரசு பெற்றுள்ள உத்தரவு இலங்கை – சீன ஊடாட்டத்தில் ஒரு பெரும் கீறலை உருவாக்கும் என்றால், மறுபுறத்தில் யுகதனவி மின் நிலையப் பங்குகளை அமெரிக்க நிறுவனத்திற்கு மாற்றியமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் அமெரிக்க – இலங்கை உறவில் நெருடலை ஏற்படுத்தும் விவகாரமாக மாறக்கூடும். உயர்நீதிமன்றத்தின் – நீதித்துறையின் – தலையாட்டினால் இராஜதந்திர நெருக்குவாரங்களை இலங்கை சந்திக்கப் போவது என்னவோ மறுக்க முடியாத யதார்த்தமாகவே படுகின்றது

# ஊடகவியலாளர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவது கண்டிக்கத்தக்கது

## செல்வம் எம்.பி. காட்டம்

மக்களுக்காக செயற்பட்டுவரும் ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் பயங்கரவாத விசாரணை பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்படுவதை கண்டிக்கிறேன் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஊடகவியலாளர் நவரத்தினம் கபிலநாத் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப்பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அவரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

அண்மைக்காலமாக வடக்கு, கிழக்கு உட்பட இலங்கையின் அனைத்துப்பகுதியிலும் ஊடகத்துறையினரை அச்சுறுத்தும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

தனது புலனாய்வாளர்களை வைத்து மக்களுக்காகக் குரல்கொடுத்தும் தம்மாலான பணிகளை செய்துவரும் ஊடகத்துறையினரை உள ரீதியாகத் தாக்கத்திற்குள்ளாக்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ள அரசாங்கம் அதற்காக பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப்பிரிவைப் பயன்படுத்துகின்றது. வவுனியா மாவட்டத்தில் ஊடகத்துறையில் நீண்டகாலமாக செயற்பட்டு வரும் சிரேஷ்ட ஊடகவியலாளர் ந. கபிலநாத் ஊடகப் பணிக்கு அப்பால் தமிழ் மக்களின் தொல்லியல் தொடர்பான தேடல்கொண்ட ஒருவராகவும், மக்களின் வறுமையைப் போக்கவும் பல்வேறு உதவிகளை வழங்கி வருபவராகவே அறியப்பட்டவர்.

இவ்வாறு சமூக சிந்தனை கொண்ட ஊடகத்துறை சார்ந்தவர்களைத் தொடர்ந்தும் அச்சுறுத்தும் வகையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணைக்குட்படுத்துவதை எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இலங்கையில் நடந்த ஊடகத்துறையினர் மீதானதும், ஊடக நிறுவனங்கள் மீதானதுமான தாக்குல்கள் மற்றும் அநீதிகளுக்கு இதுவரை பொறுப்புக் கூற முடியாத அரசு ஊடகத்துறையினரை மௌனிக்கச் செய்யும் செயற்பாட்டையே தொடர்ந்தும் முன்னெடுக்கின்றது.

எனவே அரசாங்கம் தமது இயலாமையின் உச்சமாக ஊடகத்துறையினர் மீதும் தனது அழுத்தத்தைப் பிரயோகிப்பது ஜனநாயகத்தின் மீதான சந்தேகத்தை எழுப்புகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

# ஹப்புத்தளையில் சவப்பெட்டி ஏந்தி அரசுக்கு எதிராக கோஷமிட்ட மக்கள்





பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தலைமையில், ஹப்புத்தளை நகரில் நேற்று (சனிக்கிழமை) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தவும், மலையக மக்களின் இருப்பை உறுதி செய்யவும், அவர்களுடைய தொழில் பிணக்குகள் தொடர்பாகவும், பெருந்தோட்டக் கம்பனிகளின் அடாவடி நிர்வாகத்துக்குப் பதிலடி தரும் நோக்குடனும், உரத்தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், விவசாயிகளைப் பாதுகாக்குமாறு கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, ஒப்பாரி வைத்தும், சவப்பெட்டியை ஏந்தியும் போராட்டக்காரர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். அத்துடன், தமக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனவும் கோஷம் எழுப்பினர்.

இதன்போது கருத்து தெரிவித்த வடிவேல் சுரேஷ் –

அனைத்து வளங்களும் நிறைந்த நம் இலங்கை திருநாடு இன்று வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கின்றது.

குழந்தைகள் குடிப்பதற்கு பால் மா இல்லை, அரிசி தட்டுப்பாடு, உரத்தட்டுப்பாடு, பெருந்தோட்ட மக்கள் தேயிலை கொழுந்தை உண்ண வேண்டிய அவல நிலை. மேலும் 1,000 ரூபா சம்பளம் என்ற கபட நாடகத்தில் சிக்கித் தவிக்கின்ற பெருந்தோட்ட மலையக மக்களைத் தொடர்ந்து வஞ்சித்து கொண்டிருக்கின்ற பெருந்தோட்ட நிர்வாகங்கள். பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு.

மலையக மக்களின் உரிமைகளையும் வாழ்வாதாரத்தையும் இருப்பையும் தக்க வைத்துக்கொள்ள இன்று வீதிக்கு இறங்கி இருக்கின்றோம் இது முடிவல்ல. – என்றார்.

# மசகு எண்ணெய் உற்பத்தி தொடரும் என்கிறார் சவுதி இளவரசர்



பன்னாட்டு எரிபொருள் சந்தையின் நிலைத்த தன்மையை பாதிக்காமல் தங்கள் இலக்கை எட்டுவோம் என்கிறார் முகமது பின் சல்மான்.

உலகின் மிகப்பெரிய மசகு எண்ணெய் ஏற்றுமதி நாடான சவுதி அரேபியா 2060ஆம் ஆண்டில் தமது நிகர கார்பன் உமிழ்வு பூச்சியமாக இருக்கும் என்று உறுதி அளித்துள்ளது.

ஒரு நாட்டிலிருந்து வெளியிடப்படும் கார்பனின் அளவு உறிஞ்சப்படும் கார்பனின் அளவு ஆகிய இரண்டுமே சரி சமமாக இருப்பது கார்பன் உமிழ்வின் நிகர அளவு பூச்சியமாக இருப்பதைக் குறிக்கும்.

இந்த இலக்கை அடைவதற்கு 180 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான பணத்தை சவுதி அரேபிய அரசு முதலீடு செய்யும் என்று அந்நாட்டின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் தெரிவித்துள்ளார். இதன் தற்போதைய இந்திய மதிப்பு சுமார் 13.5 லட்சம் கோடி ரூபா.

கார்பன் உமிழ்வுக்கு பெரும் பங்காற்றும் மசகு எண்ணெய் உற்பத்தியையும் அடுத்துவரும் தசாப்தங்களில் சவுதி அரேபியா தொடரும் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

பருவநிலை மாற்றம் குறித்த உலக நாடுகளின் CoP26 உச்சி மாநாடு தொடங்குவதற்கு இன்னும் சில நாள்களே உள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது.

இந்த உச்சி மாநாட்டில் பசுமை இல்ல வாயுக்கள் வெளியேற்றத்தை குறைப்பதற்கான தங்களின் திட்டத்தை வெளியிட்டு, புவி வெப்பமயமாதலைத் தடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்ற அழுத்தத்துக்கு உலக நாடுகளின் தலைவர்கள் உள்ளாகியுள்ளனர்.

தங்களது நாட்டின் மிக கார்பன் வெளியேற்றத்தின் நிகர அளவு பூச்சியம் ஆக இருக்கவேண்டும் என்று உறுதி ஏற்றுள்ள நூற்றுக்கும் மேலான நாடுகள் பட்டியலில் தற்போது சவுதி அரேபியாவும் சேர்ந்துள்ளது.

பசுமை இல்ல வாயுக்களை மேலதிகமாக ஒரு நாடு வளிமண்டலத்தில் உமிழாமல் இருக்கும் நிலை கார்பன் உமிழ்வு உங்களின் நிகர அளவு பூச்சியமாக இருக்கும் பொழுது உண்டாகும்.

இதை எட்டுவதற்கு ஒவ்வொரு நாடும் பல கட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கும். முக்கியமாக வளிமண்டலத்தில் கலக்கும் கார்பன் டை ஒக்சைடின் அளவைக் குறைக்கவேண்டும்.

இது பெரும்பாலும் நிலக்கரி, பெற்றோல் உள்ளிட்ட படிம எரிபொருள்களைப் பயன்படுத்துவதால் நடக்கிறது. அத்துடன் அதிக அளவில் மரங்களை நடுதல், வனப் பரப்பை அதிகரித்தல், வளிமண்டலத்தில் கார்பனைக் கலக்க விடாமல் தடுக்கும் கார்பன் - கேப்ச்சர் தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளிலும் ஒவ்வொரு நாட்டின் அரசும் ஈடுபட வேண்டும். 2060ஆம் ஆண்டில் கார்பன் உமிழ்வின் நிகர அளவைப் பூச்சியமாக்க சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் திட்டமிட்டுள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன், சவுதி அரேபியாவின் அண்டை நாடான ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட நாடுகள் 2050ஆம் ஆண்டிலேயே நிகர பூச்சியம் எனும் அளவை எட்ட வேண்டும் என்று திட்டமிட்டுள்ளன.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உலகில் மசகு எண்ணெய் அதிகமாக தயாரிக்கும் நாடுகளில் ஒன்றாக உள்ளது.

உலகிலேயே கார்பன்-டை-ஒக்சைடு அதிகமாக வெளியிடும் நாடுகள் பட்டியலில் சவுதி அரேபியா 10ஆவது இடத்தில் உள்ளது.

படிம எரிபொருள் பயன்பாடு மற்றும் உற்பத்தி மீதான தங்களது முதலீட்டை குறைக்கவேண்டும் என்று உலக நாடுகளின் கோரிக்கையை சவுதி அரேபியா பல்லாண்டு காலமாக கண்டுகொள்ளாமல் இருந்தது.

2030ஆம் ஆண்டுக்குள், பசுமை இல்ல வாயுவான மெதேனின் உமிழ்வு தற்போதைய அளவில் இருந்து 30 சதவிகிதம் கட்டுப்படுத்தப்படும் என்றும் சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் தெரிவித்துள்ளார். பல நூறு கோடி மரங்களை நட்டு, புதுப்பிக்கத்தக்க எரிபொருள் பயன்பாட்டுக்கு மாறி கார்பன் உமிழ்வைக் கட்டுப்படுத்துவோம் என்று இந்த ஆண்டின் தொடக்கத்தில் சவுதி அரேபிய அரசு கூறியிருந்தது.




# நைஜீரியாவில் ஐ.எஸ். அமைப்பின் உள்நாட்டு தலைவர் சுட்டுக் கொலை!

நைஜீரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய தீவிரவாதக் குழுவின் புதிய தலைவரான மலாம் பாகோ சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என நைஜீரிய பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதக் குழுவின் உள்நாட்டு அமைப்பான ஐ.எஸ்.ஐ.எல். குழுவின் தலைவரே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என நைஜீரியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பாபகனா மோங்குனோ கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

நைஜீரியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளில் நூற்றுக்கணக்கானவர்களைப் படுகொலை செய்த சம்பவத்துடன் சுட்டுக்கொல்லப்பட்ட தீவிரவாத அமைப்பின் தலைவருக்கு தொடர்புள்ளதாகவும் அவர் கூறினார்.

ஐ.எஸ்.ஐ.எல். குழுவின் தலைவராக இருந்த அபு முசாப் அல்-பர்னாவி கடந்த வாரம் பாதுகாப்பு படைகளால் கொல்லப்பட்ட பின்னர் மேற்கு ஆபிரிக்காவுக்கான ஐ.எஸ். தலைவராக மலாம் பாகோ செயற்பட்டு வந்தார்.

இந்நிலையில் மேற்கு ஆபிரிக்காவில் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் இரண்டு தலைவர்கள் அடுத்தடுத்துக் கொல்லப்பட்டமை அந்த அமைப்புக்கு பலத்த பின்னடைவாகக் கருதப்படுகிறது.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் ஐ.எஸ். அல்கொய்தா, போகோ ஹறாம் போன்ற பயங்கரவாத அமைப்புகளும், பல்வேறு கிளர்ச்சியாளர்கள் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில் நைஜீரியால் இடம்பெற்றுவரும் மோதல்களில் இதுவரை சுமார் 350,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர்என ஐ.நா. தெரிவித்துள்ளது.

# மியன்மார் நாட்டில் மனித உரிமை மீறல்?

ஐ.நா. சந்தேகம்



மியன்மாரில் ஆட்சி கவிழ்ப்புக்குப் பின்னர் பாரிய மனித உரிமை மீறல் இடம்பெற்றிருக்கலாம் என அஞ்சுகிறோம் என ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி டொம் அன்ட்ரு தெரிவித்துள் ளார்.

மியன்மார் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கிய வருடாந்த ஆய்வறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் மியன்மாரின் இராணுவ அரசாங்கம் போர்க்குற்றங்களில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன. தென்கிழக்காசிய நாடான மியன்மாரில் கடந்த பெப்ரவரி மாதம் ஆட்சி கவிழ்ப்பு இடம்பெற்ற நிலையில் தற்போது நாடு உள்நாட்டுப் போரின் நிலையில் காணப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

குறிப்பாக ஆயிரக்கணக்கான படையினரும் பாரிய கனரக ஆயுதங்களும் மியன்மாரின் வடக்கு மற்றும் வடமேற்கு பிராந்தியங்களில் உள்ள பகுதிகளுக்கு நகர்த்தப்படுவது குறித்த தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மியன்மாரில் ஆட்சிக்கவிழ்ப்பு இடம்பெற்றதிலிருந்து இதுவரையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதோடு 8 ஆயிரம் பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

Personal English Classes

K Ganesh (BA.Pera)

இந்த தனி வகுப்புகளில் படிக்கும் போது பேச்சு பயிற்சிகளும் இடம்பெறும்.

Grade 7-
GCE OL AL
பட்டதாரிகள் ,
தொழில்புரிவோர்
Spoken Grammar
கற்கமுடியும்.

077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

# இலங்கைக் கடற்படைக் கப்பல் மோதி உயிரிழந்த மீனவரின் உடல் அவரது ஊரில் நல்லடக்கம்



இலங்கைக் கடற்படைக் கப்பல் மோதியதால், படகு கவிழ்ந்து கடலில் மூழ்கி உயிரிழந்த கோட்டைப்பட்டினம் மீனவர் ராஜ்கிரண் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

புதுக்கோட்டை கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த ராஜ்கிரண், சுகந்தன், சேவியர் ஆகியோர் கடந்த 18 ஆம் திகதி கோவளம் கடற்பகுதியில் மீன்பிடித்தபோது இலங்கை கடற்படை கப்பல் மோதியது. அதில் சுகந்தன், சேவியர் ஆகிய இருவரும் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில் ராஜ்கிரண் கடலில் மூழ்கி உயிரிழந்தார். உடற்கூறாய்வுக்குப் பிறகு இலங்கையிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் ராஜ்கிரண் உடல் கொடுக்கப்பட்டது.

அதன்பின், இலங்கைக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட உடல், சர்வதேச எல்லையில் இந்திய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது. அங்கிருந்து படகில் வைத்து கொண்டுவரப்பட்ட ராஜ்கிரணின் உடல், கோட்டைப் பட்டினத்தில் உள்ள அவரது குடும்பத்தினரிடம் வழங்கப்பட்டது.

ராஜ்கிரணின் உடலுக்கு அமைச்சர் ரகுபதி அஞ்சலி செலுத்தினார். முதலமைச்சர் அறிவித்த 10 லட்சம் ரூபா நிவாரணத் தொகையையும் அவர் ராஜ்கிரண் குடும்பத்தினரிடம் வழங்கினார். ராஜ்கிரணுக்குத் திருமணமாகி ஒரு மாதமே கடந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




மாங்கல்யா
லக்ஷ்மி நாராயணா
திருமண சேவை
இல:- 266 பலாலி வீதி.
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
077 197 1667
077 316 4796

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1991.09.10 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - சித்திரை
கி.பா - 25 செவ் - 12 இல்
தகைமை - G.C.E A/L
தொழில் - Management Assistant
எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகள்

பிறந்த திகதி -1989.01.27 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அத்தம்
கி.பா - 34 செவ் - 2இல்
தகைமை - G.C.E. A/L தொழில் - Company owner
எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள்

பிறந்த திகதி - 1989.22.05 மதம் - இந்து
ஜாதி - விஸ்வகுலம் ஆண் நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 42 செவ் - 2 இல்
தகைமை - Surveyor தொழில் - அரசசேவை
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச மணமகள் தேவை

பிறந்த திகதி - 1987.11.13 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 64 செவ் - 6இல்
தகைமை - H.N.D.A தொழில் - அரச சேவை
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை

பிறந்த திகதி - 1989.9.10 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூராடம்
கி.பா - 31 செவ் / சூரி- 9இல்
தகைமை - B.Com தொழில் - DO அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள்

பிறந்த திகதி - 1987.06.02 மதம் - இந்து
ஜாதி - K பகுதி நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 20 செவ் - 7 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor Eng மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1993.10.11 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 30 செவ் - 7 இல்
தகைமை - B.Sc Civil Eng தொழில் - Singapour
எதிர்பார்ப்பு - Eng / Doctor மணமகள் தேவை

பிறந்த திகதி -1974.01.08 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - திருவாதிரை
கி.பா - 10 செவ் - 3இல்
தகைமை - Lowyer தொழில் - சட்டத்தரணி
எதிர்பார்ப்பு - 1980 பின்பு A/L படித்த மணமகள். சீதனம் பெரிதாக எதிர்பார்க்கவில்லை

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1991.03.05 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - சுவாதி
கி.பா - 18 செவ் 7 இல்
தகைமை - Business Management
தொழில் -Bank Officer
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 27.08.1994 மதம் - இந்து
ஜாதி - பத்தர் பெண் நட்சத்திரம் - பரணி
கி.பா - 32 செவ் சூரி - 2 இல்
தகைமை - B.Sc தொழில் - அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 1992.08.04 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - சித்திரை 2
கி.பா - 3 செவ் - 9 இல்
தகைமை - G.A.Q தொழில் -
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் தேவை

பிறந்த திகதி - 1990.27.10 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - திருவோணம்
கி.பா - 30 செவ் -7 இல்
தகைமை - BA தொழில் - DO அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச உயர் பதவி மணமகன் தேவை

பிறந்த திகதி - 1990.07.14 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - உத்தரட்டாதி
கி.பா - 23 செவ் - 6 இல்
தகைமை -B.Sc, M.Sc தொழில் - அரச உயர் பதவி
எதிர்பார்ப்பு - Eng/ Doctor அரச உயர் பதவி மணமகன்

பிறந்த திகதி - 26.04.1993 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரேவதி
கி.பா - 40 செவ் - 8இல்
தகைமை - Cima
தொழில் - Bank accountant
எதிர்பார்ப்பு - அரச சேவை. கொழும்பில் மணமகன்

பிறந்த திகதி -1993.11.01 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - கார்த்திகை
கி.பா - 67 செவ் -1 இல்
தகைமை - H.N.D.A தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரசசேவை யாழ் மணமகன்

பிறந்த திகதி - 1993.09.06 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பரணி
கி.பா - 33 செவ் - 12இல்
தகைமை - .B.Sc தொழில் - DO அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச உயர்பதவி மணமகன்



ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர்
தொலைபேசி
021 222 3000




மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்கக் கோரி

## மத்திய, மாநில அரசுகளை கண்டித்து ஆர்ப்பாட்டம்

இலங்கைக் கடற்படைப் படகு மோதி மீனவர் உயிரிழந்த விவகாரத்தில் இலங்கை அரசைக் கண்டிக்காத மத்திய, மாநில அரசுகளுக்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்க மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 18 ஆம் திகதி கோட்டைப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர் படகு மீது, இலங்கைக் கடற்படை விசைப் படகு மோதிய விபத்தில் ராஜ்கிரண் என்ற மீனவர் உயிரிழந்தார். இதைக் கண்டித்து ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் தங்கச்சிமடம் வலசை பேருந்து நிறுத்தம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அப்போது, இலங்கை அரசை விமர்சித்தும் இந்திய மீனவர்களைத் தொடர்ந்து படுகொலை செய்துவரும் இலங்கை அரசைக் கண்டிக்காமலும் கண்டுகொள்ளாமலும் இருந்து வருவதாகக் கூறி மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராகவும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. அதேபோல் படுகொலை செய்யப்பட்ட மீனவர் குடும்பத்திற்கு தகுந்த இழப்பீடு வழங்கி, அந்தக் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையை வழங்குவதோடு, கடலில் மீன் பிடித்துவரும் மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டுமென்றும் அவர்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

## திருப்பதியில் வெள்ளத்தில் கார் மூழ்கியதில் புதுமணப்பெண் பரிதாபமாக உயிரிழப்பு

கர்நாடகாவைச் சேர்ந்த சந்தியா என்ற புதுமணப்பெண், தனது குடும்பத்தினருடன் திருப்பதிக்கு காரில் சென்று கொண்டிருந்தபோது திருப்பதியில் பெய்த கனமழை காரணமாக ஆங்காங்கே வெள்ளம் சூழ்ந்து காணப்பட்டது. எம்.ஆர். பள்ளிச் சாலை என்ற இடத்தில் கார் சென்றபோது, அங்கிருந்த ரயில் சுரங்கப் பாதையில் இருந்த நீரில் கார் மூழ்கியிருக்கிறது.

இதில், காரில் இருந்தவர்கள் வெளியேறித்தப்பிக்க முயன்ற நிலையில், சந்தியா மட்டும் காருக்குள் சிக்கியதால் நீரில் மூழ்கி உயிரிழந்தார். தண்ணீரின் அளவு தெரியாமல் ரயில் சுரங்கப்பாதை அருகே காரை இயக்கிச்சென்றதாலேயே நீரில் மூழ்க நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நல்லாட்சி அரசாங்க கால வீட்டுத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமையால் மக்கள் அதிருப்தி

நல்லாட்சி அரசாங்க காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டங்களை பூரணப்படுத்த முடியாத நிலையில் தாம் இருக்கிறோம் எனவும், இதுவரையில் இந்த அரசாங்கமோ, அரசாங்கம் சார்ந்த பிரதிநிதிகளோ எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவிற்குள் அமைந்துள்ள மகிழவட்டவான் மற்றும் நரிப்புல் தோட்ட வீட்டுத் திட்டங்களின் பயனாளிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் பல அடிக்கல் நடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றமை தொடர்பில் அப்பிரதேசத்துக்கு விஜயம் செய்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசனின் கவனத்துக்குக் கொண்டு வந்த குறித்த வீட்டுத்திட்டங்களின் பயனாளிகள், அதனை பூரணப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னாள் வீடமைப்பு நிர்மானத்துறை அமைச்சரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவின் கவனத்துக்குக் கொண்டு சென்று தமக்குரிய நிதிகளை ஒதுக்கித்தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பொதுமக்கள் –

கடந்த நல்லாட்சிக் காலத்தில் அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் ஊடாகத் தமக்கான வீடுகளை நிர்மானித்துக் கொள்ளும் வகையில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு அதன் ஊடாகத் தாம் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்திருந்தோம் எனவும், இருந்தும் ஆட்சி மாற்றத்தின் பின்னர் அடுத்த கட்ட நிதிகள் ஒதுக்கப்படாமையால் அந்த வீடுகளைப் பூரணப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் கட்டுமானப் பணிகளைத் தொடருங்கள் அரசாங்கம் மிகுதி பணத்தைத் தரும் என்று கூறும் அதிகாரிகளின் உத்தரவாதத்தை நம்பி தமது உடமைகளை விற்றும் நகைகளை அடமானம் வைத்தும் இப்பணிகளை முன்னெடுத்தோம் எனவும், இருந்த போதும் தமது வறுமையின் காரணமாகவும், பொருள்களின் விலை ஏற்றத்தின் காரணமாகவும் அதனை முழுமையாகப் பூரணப்படுத்த முடியாமையால் தொடர்ந்தும் தமது குழந்தைகளுடன் குடிசை வீடுகளிலேயே வசித்து வருகின்றோம் எனவும், இதனால் மழை காலம் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றோம் எனவும் கவலை வெளியிட்டனர்.

அத்துடன், கடந்த தேர்தலின் போது வீடுகளைப் பூரணப்படுத்தி தருவோம் என வாக்குறுதிகளை வழங்கிச் சென்ற தற்போதைய அரசாங்க தரப்பு மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்களிடம் முறையிட்டும் அது தொடர்பில் அவர்கள் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றும், கடந்த ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் என்பதால் தாம் தொடர்ந்தும் தட்டிக் கழிக்கப்பட்டு வருகின்றோம் எனவும் விசனம் தெரிவித்ததோடு, இது தொடர்பில் தமக்கான வீட்டுத் திட்டங்களை வழங்கிய முன்னாள் வீடமைப்பு நிர்மானத்துறை அமைச்சரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவின் கவனத்துக்கு கொண்டு சென்று தமக்குரிய நிதிகளை ஒதுக்கி உதவுமாறும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் –

கடந்த நல்லாட்சிக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான வீட்டுத்திட்டங்கள் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டு அவற்றில் பல பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன எனவும், இருந்தபோது தற்போதைய அரசாங்கம் இறுதியாக ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை செய்யாது கிராம சேவகர் பிரிவிற்கு ஓரிரு வீடுகளை அமைத்துக் கொடுத்து வருவதாகவும், கடந்த அரசாங்கம் ஆரம்பித்த வேலைத் திட்டம் என்பதற்காக இந்த அரசாங்கம் இப்படிப்பட்ட மக்களை பழிவாங்க முனையக் கூடாது என்றும், இது தொடர்பில் அரசாங்கம் சார்பான பிரதிநிதிகளும் கவனம் செலுத்த வேண்டும் எனவும், தெரிவித்ததோடு இந்த விடயத்தை எதிர்க்கட்சித் தலைவரின் கவனத்திற்கும் தாம் கொண்டுசென்று உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம் எனவும் உறுதியளித்துள்ளார்.

# இளைஞர்கள் மீதான கோரத் தாக்குதல்; தமிழ் தேசிய மக்கள் முன்னணி கண்டனம்

நாட்டையும், நாட்டுப் பொது மக்களையும் பாதுகாப்பாக வழி நடத்துகின்ற இந்த பாதுகாப்பு தரப்புக்கள் இவ்வாறு மிருகத்தனமாக தாக்குதல் நடத்தினால் பொது மக்கள் யாரை நாடிப் போவது? எனவே இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் இரு இளைஞர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்திய சம்பவத்தைக் கண்டித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் –

மட்டக்களப்பு மாவட்டத்திலே ஏறாவூர் மைலம்பாவெளி பகுதியில் இரு இளைஞர்கள் வீதி போக்குவரத்தை மீறினர் எனக் குற்றம் சாட்டப்பட்டு போக்குவரத்து பொலிஸார் ஒருவரால் கண்மூடித்தனமாகத் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

உண்மையிலே இந்த மூர்க்கத்தனமான தாக்குதலை முதலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

அதேவேளை மாவட்டத்திலே அப்பாவிகள் மீது இப்படி பொலிஸாருடைய அடாவடித்தனங்கள் இடம்பெற்று வருகின்றது. அண்மையிலே வவுணதீவு பிரதேசத்தில் இரண்டு இளைஞர்கள் தாக்கப்பட்டனர்.

அதேவேளை இருதயபுரம் பகுதியில் ஓர் இளைஞன் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். இவ்வாறு சட்டம் இருக்கத்தக்கதாக மனித உரிமை மீறல்கள், மனிதக் குலத்துக்கு எதிரான சம்பவங்களை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறே தொடர்ந்து பல சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இந்தத் தாக்குதல்களைப் பார்க்கும் போது சம்பவங்களைப் பொலிஸார் கையாளத் தெரியாது தங்களுக்கு ஏற்ற விதத்தில் கையாளுகின்றார்கள்.

எனவே மாவட்டத்திலுள்ள பொலிஸ் அதிகாரிகள் பொலிஸாரை சிறந்த முறையில் வழிநடத்தத் தவறியதாலும், மனித உரிமையைப் பாதுகாத்தல், பொதுமக்களுடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் தொடர்பாக பொலிஸாருக்கு பயிற்சி அளிக்கப்படாததாலேயே இவ்வாறு பொலிஸார் பொதுமக்கள் மீது மூர்க்கத்தனமான தாக்குதலை மேற்கொள்ளுகின்றனர்.

எனவே நாட்டையும், நாட்டு பொதுமக்களையும் பாதுகாப்பாக வழிநடத்துகின்ற இந்த தரப்புக்கள் வந்து இவ்வாறு மிருகத்தனமாகத் தாக்குதல் நடத்தினால் பொதுமக்கள் யாரை நாடிப் போவது என்பதுதான் இன்றைக்கு இருக்கும் கேள்வி.

வடக்கு, கிழக்கிலே நீண்ட நாள்களாக இப்படியான சம்பவங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. எனவே இப்படியான தாக்குதல்களை நிறுத்தவேண்டும். இந்த சம்பவத்தில் தொடர்புடையவருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

அதேவேளை இப்படியான சம்பவங்கள் இனிமேல் இடம் பெறாது என பொலிஸ் மா அதிபர் உறுதிப்படுத்த வேண்டும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# முதலமைச்சர் கனவுடன் சாணக்கியன் எம்.பி. மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துகிறார்

## ருவான் பேதுரு ஆராய்ச்சி சாடல்




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் முதலமைச்சர் கனவுடன் மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தி வருகிறார் என ஐக்கிய பொதுஜன கட்சியின் தலைவர் ருவான் பேதுரு ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மட்டக்களப்பில் இருக்கின்ற அரசியல்வாதிகள் இங்கு மூன்று பிரிவுகளாகப் பிரிந்து செயற்படுகின்றமையை நான் காண்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்வாதிகள் ஒரு பகுதி மக்களை வேறுபடுத்தியும் இன ரீதியான செயற்பாடுகளை முன்னெடுத்தும் வருகின்றனர். அரசாங்கம் சார்பில் செயற்படும் சந்திரகாந்தன், வியாழேந்திரன் போன்றவர்கள் வேறு வகையான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தமிழ் மக்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டிருக்கின்றனர். அவர்களின் பிரச்சினைகளைப் பார்த்துத் தீர்த்தும் வைப்பதற்கு இவ்வாறானவர்களுக்கு நேரமிருப்பதில்லை.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையே பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். நாங்கள் அவ்வாறான அரசியலை முன்னெடுப்பதில்லை. நாங்கள் இந்த நாட்டு மக்களை ஒன்றாகவே நோக்குகின்றோம். அவர்களின் பிரச்சினைகளையே தீர்ப்பதற்கு முயற்சிக்கிறோம். இங்குள்ள அரசியல்வாதிகள் இங்கு வாழ்ந்த சிங்களவர்களை குடியேறவிடாமல் தடுக்கின்றனர். அவர்கள் இங்கு வாழ்ந்தவர்கள். அவர்கள் வாழ்வதில் என்ன தவறு இருக்கின்றது. தமிழ்–சிங்கள மக்கள் ஒன்றாக வாழ்வதையே நாங்கள் விரும்புகின்றோம். – எனத் தெரிவித்துள்ளார்.

# திருமலை தியான மண்டபத்தை திறந்துவைத்தார் மைத்திரிபால





திருகோணமலை–மஹதிவுல்வெள திவுறும்கல விகாரையில் நிர்மாணிக்கப்பட்ட தியான மண்டபம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

யுத்தத்தால் சேதமடைந்த பழைமை வாய்ந்த இந்த விகாரை பல வருட காலமாக பாழடைந்த நிலையில் காணப்பட்ட போது தெவனிபியவர இந்ராராம விகாரையின் விகாராதிபதி பொல்ஹேன்கொட உபரத்ன ஹிமி பொறுப்பேற்று தனியாரொருவரின் நிதிப் பங்களிப்புடன் தியான மண்டபம் நிர்மாணிக்கப் பட்டது.

இந்நிகழ்வின் போது திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பிரமுகர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# நடப்புச் சம்பியன் மே.இந்தியத் தீவுகளை அடித்துத் துவைத்தது இங்கிலாந்து அணி

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற சூப்பர்-12 சுற்றின் இரண்டாவது போட்டியில் நடப்புச் சம்பியன் மேற்கிந்திய தீவுகள் அணியை 6 விக்கெட்டுக்களால் இங்கிலாந்து அணி வென்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மேற்கிந்திய தீவுகள் அணி, இங்கிலாந்தின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 55 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் பரிதாபகரமாக இழந்தது. ரி-20 கிரிக்கெட் வரலாற்றில் அணியொன்று எடுத்த மூன்றாவது குறைந்த ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

இதற்குமுன் ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கைக்கு எதிரான இரண்டு போட்டிகளில் நெதர்லாந்து 2014 இல் பெற்ற 39 ஓட்டங்களும், இந்த முறை எடுத்த 44 ஓட்டங்களும் முதலிரண்டு இடங்களில் உள்ளன. மேற்கிந்தியத் தீவுகளின் கிறிஸ் கெயில் அதிகபட்சமாக 13 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள, ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்கத்துடன் ஆட்டமிழந்திருந்தனர். இங்கிலாந்து அணியின் அடில் ரஷிட் 2 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்ற, மொயின் அலியும், டைமல் மில்சும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இலகுவான இலக்கை நோக்கிக் களமிறங்கிய இங்கிலாந்து அணியும் 4 விக்கெட்டுக்களை அடுத்தடுத்து இழந்தது. ஜேசன் ரோய் 11, பெயர்ஸ்டோ 9, மொயின் அலி 3, லியாம் லிவிங்ஸ்டன் ஒரு ஓட்டத்தையும் எடுத்து ஆட்டமிழக்க, ஜோஸ் பட்லர் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களைப்பெற்று வெற்றியை உறுதிப்படுத்தினார். இங்கிலாந்து அணி, 8.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 56 ஓட்டங்களை எடுத்து ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் வரலாற்றில் மேற்கிந்திய தீவுகள் அணியை முதன்முதலாக வெற்றிபெற்றது. இந்தப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக மொயின் அலி தெரிவானார்.

இந்தப் போட்டியில் பெற்ற வெற்றியின் மூலம் குழு 1 இல் 2 புள்ளிகளோடு இங்கிலாந்து அணி முதலிடம் பெற்றுள்ளது.

## இந்தியா—இங்கிலாந்து அணிகளின் ஐந்தாவது டெஸ்ட் அடுத்த ஆண்டு ஜூலையில் நடைபெறுமென அறிவிப்பு

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஒத்திவைக்கப்பட்ட ஐந்தாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

கொரோனாப் பரவல் அச்சத்தால் இந்த இரு அணிகளுக்குமிடையிலான டெஸ்ட் தொடரின் ஐந்தாவது போட்டி ஒத்திவைக்கப்பட்டது. செப்டெம்பர் 10 முதல் 14 ஆம் திகதி வரையில் இங்கிலாந்தின் மன்செஸ்டர் நகரில் உள்ள ட்ராபோர்ட் மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற இருந்தமை குறிப்பிடத்தக்கது.



இந்திய கிரிக்கெட் அணி கடந்த ஓகஸ்ட் முதல் செப்டெம்பர் வரையில் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இந்தத் தொடரில் நான்கு போட்டிகள் நடந்து முடிந்த நிலையில் இந்தியா 2 - 1 என தொடரில் முன்னிலை பெற்றுள்ளது. ஐந்தாவது டெஸ்ட் போட்டி ஒத்திவைக்கப்பட்டது. அந்தப் போட்டி அடுத்த ஆண்டு ஜூலை முதலாம் திகதி எட்ஜ்பஸ்டனில் ஆரம்பமாகுமென்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளது. இந்தியா அடுத்த ஆண்டு மேற்கொள்ளவுள்ள இந்த கிரிக்கெட் பயணத்தில் மூன்று ரி-20, மூன்று ஒருநாள் போட்டிகளோடு இந்த ஐந்தாவது டெஸ்ட் போட்டியும் நடத்தி முடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.




## துடுப்பாட்டத்தில் தடுமாறிய தென்னாபிரிக்கா முதல் போட்டியில் வென்றது ஆஸ்திரேலியா

ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் சூப்பர்-12 சுற்றின் முதல் போட்டியில் ஆஸ்திரேலிய அணி தென்னாபிரிக்க அணியை 5 விக்கெட்டுக்களால் வென்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி, முதலில் துடுப்பெடுத்தாடுமாறு தென்னாபிரிக்க அணியை அழைத்தது. தென்னாபிரிக்க அணி ஆரம்பம் முதலே ஆஸ்திரேலியப் பந்துவீச்சில் தடுமாறி, இறுதியில் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது. எய்டன் மார்க்ரம் 40 ஓட்டங்களைப் பெற்றார். ஆஸ்திரேலிய அணியின் மிச்சல் ஸ்டார்க், ஜோஸ் ஹசல்வூட் மற்றும் அடம் சம்பா மூவரும் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பின்னர் துடுப்பாடக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி, போட்டியின் வெற்றி இலக்கை 19.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் அடைந்து வெற்றிபெற்றது. ஸ்டீவன் ஸ்மித் 35 ஓட்டங்களையும், ஸ்டொய்னிஸ் ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களையும் எடுத்தனர். தென்னாபிரிக்க அணியின் அன்ட்ரிஜ் நோர்ட்ஜே 2 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக ஜோஸ் ஹசல்வூட் தெரிவானார்.

தென்னாபிரிக்காவுடனான இந்த வெற்றியின் மூலம் 2 புள்ளிகளைப் பெற்றிருக்கும் ஆஸ்திரேலியா, குழு 1 இல் இரண்டாமிடத்திலுள்ளது.

## சில போட்டிகளை கேன் வில்லியம்சன் தவிர்க்கலாமென பயிற்சியாளர் தகவல்

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவரான கேன் வில்லியம்சன், முழங்கையில் ஏற்பட்டுள்ள காயத்தின் காரணமாக ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் சில போட்டிகளை தவறவிட வாய்ப்பு உள்ளதாக அந்த அணியின் பயிற்சியாளர் கரி ஸ்டெட் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் ஹைதராபாத் அணிக்காக கடைசி லீக் போட்டியில்அவர் விளையாடவில்லை என்பதோடு, இங்கிலாந்து அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்திலும் அவர் விளையாடியிருக்கவில்லை.

இங்கிலாந்து அணியுடனான பயிற்சி ஆட்டத்தில் வில்லியம்சனை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாங்கள் களமிறக்கவில்லை. அவருக்கு முறையான ஓய்வு இருந்தால் நிச்சயம் தேறிவிடுவார் என்ற நம்பிக்கை உள்ளது. அதன் காரணமாக அவர் முதல் சில போட்டிகளில் விளையாடுவதைத் தவிர்க்க வாய்ப்புகள் உண்டு. அவருக்குக் கொஞ்சம் ஓய்வு தேவைப்படுகிறது. அவ்வளவுதான் என பயிற்சியாளர் தெரிவித்திருக்கிறார்.

நியூசிலாந்து அணி தனது முதலாவது போட்டியில் நாளை மறுதினம் பாகிஸ்தான் அணியை எதிர்கொள்ளவுள்ளது



# உள்நாட்டலுவல்கள் அமைச்சு இன ரீதியாகச் செயற்படுகின்றதா?

## இம்ரான் எம்.பி. கேள்வி



உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அரசியல்மயமாக்கப்பட்டு இன ரீதியாக செயற்படுகிறதா என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் தெரிவித்த அவர்–

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அரசியல்மயமாக்கப்பட்டு இன ரீதியாகவும் இயங்குகிறதா என்ற சந்தேகம் நிலவுகிறது குறிப்பாக கிண்ணியா பிரதேச செயலாளராக கடமையாற்றியவர் அண்மையில் எந்தவித காரணமும் இன்றி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வருடாந்த இடமாற்றத்தில் இது இடம்பெறவில்லை மாவட்ட செயலாளராலேயே இவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். சில உள்ளூர் அரசியல்வாதிகளின் விருப்பத்துக்கு மாறாக செயற்பட்டமையாலேயே இவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு இன்று சட்டவிரோத மண் அகழ்வுக்கும் சட்ட விரோத காணி அபகரிப்புக்கும் அனுமதி வழங்கப்படாததால் அரச அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்படுகிறது.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் முஸ்லிம் அதிகாரிகள் பணிபுரியும் சந்தர்ப்பங்கள் மறுக்கப்பட்டு வருகின்றன. அங்கு கடமைபுரிந்த மேலதிக அரசாங்க அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கடந்த இரண்டு மாதங்களாக மாவட்ட செயலகத்தில் திட்டமிடல் பணிப்பாளர் பதவி வெற்றிடமாக உள்ளது.

அப்பதவிக்கு உரிய தகுதிகளை உடைய ஒருவர் உரிய முறைப்படி விண்ணப்பித்தும் அவர் முஸ்லிம் என்ற காரணத்தால் அமைச்சில் அவரது விண்ணப்பம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. குச்சவெளி பிரதேச செயலாளர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்ட போது முஸ்லிம் ஒருவர் உரிய முறைப்படி விண்ணப்பித்தபோதும் அவர் முஸ்லிம் என்ற காரணத்தால் அவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

நான் இந்த இடத்தில் இனவாதம் பேசவில்லை. உரிய தகுதிகளை கொண்டவர்கள் உரிய பதவிகளுக்கு இன ரீதியான பாகுபாடின்றி நியமிக்கப்பட வேண்டும்என்பதையேநான் இங்குகூறுகின்றேன் என குறிப்பிட்டார்.

# இளம் குடும்பப் பெண் கடத்தல்; வவுனியா பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் இளம் குடும்பப் பெண் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார் எனப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியைச் சேர்ந்த 19 வயது ஆண் ஒருவர் மல்லாவி பகுதியைச் சேர்ந்த 18 வயது பெண் ஒருவரைக் காதலித்துக் கடந்த ஜூலை மாதம் வவுனியாவில் பதிவுத் திருமணம் செய்திருந்தார். இந்நிலையில், குறித்த பெண் தங்கியிருந்த வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் உள்ள வீட்டுக்கு வானில் வந்த நபர்கள் வீட்டிலிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தி விட்டுக் குறித்த பெண்ணைக் கடத்திச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# முல்லைத்தீவு உடுப்புக்குளத்தில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு – உடுப்புக்குளம் பகுதியில் சட்டவிரோத நாட்டுத்துப்பாக்கியை விவசாய காணிக்கு கொண்டு சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு – றெட்பானா பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது. சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் முல்லைத்தீவு பொலிஸார் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சைவத் தமிழின் செழுமையைப் பேண உழைத்த பெருந்தகை செல்லத்துரை!

## யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் அஞ்சலி

சைவப்புலவர் சு.செல்லத்துரை ஐயா அமரத்துவம் அடைந்த செய்தியறிந்து யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் ஆழ்ந்த துயரம் அடைகின்றது. எமது சைவத் தமிழின் செழுமைக்காகத் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்ட ஆற்றலாளர் அமரர் அவர்கள்.

–இவ்வாறு யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் அஞ்சலி செய்தியில் அதன் பொதுச் செயலாளர் இ.சர்வேஸ்வரா தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

பாரம்பரியக் கல்வி முறைகளுக்குள்ளால் தமிழையும் சைவத்தையும் கற்றுத் தேர்ந்த சைவப்புலவர் சு.செல்லத்துரை, தான் கற்றுவந்த பாதைகளின் ஊடாகவே தமிழைப் பாதுகாப்பதிலும் பங்களிப்புச் செய்தவர். ஈழமண்ணில் தமிழ் நிலைத்திருப்பதற்கு சைவத்தின் வியாபகம் அவசியமானது எனும் பெரும் உண்மையை உணர்ந்து கொண்ட அவர், தமிழையும் சைவத்தையும் இணைத்துப் பல அறிவுக் காரியங்கள் ஆற்றினார்.

ஈழ மண்ணை சிவபூமி என விளித்த திருமூலர் மீதும் அவர் தந்த திருமந்திரம் மீதும் அளவற்ற பற்றும் ஆழ்ந்த புலமையும் கொண்டிருந்த அவர், தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தை அறிவுப் பாரம்பரியத்தினூடாகத் தலைமுறைக் கையளிப்புச் செய்வதற்குத் தன்னாலியன்ற பங்களிப்பை நல்கியவர்.

தொழில்சார்ந்து ஆசிரியராக, அதிபராக கல்வித்துறையில் பணியாற்றிய அவர், நேர்ந்திமிக்க நிர்வாகப் பண்புகளாலும் இளையவர்களைத் தட்டிக் கொடுத்து அழைத்துச்செல்லும் தலைமைத்துவத்தாலும் தனது கல்வியியல் தலைமைகளை அழகுபடுத்தியவர்.

சைவப்புலவர் சங்கத்தின் மூத்த தலைமகனாகவிருந்து பல இளம் சைவப்புலவர்களையும் சைவப்புலவர்களையும் உருவாக்கியவர். ஒரு பாரம்பரியக் கல்வி முறை முற்றுப் பெற்று போய்விடாது தொடர்வதற்கு காலமாற்றத்துக்கு ஏற்ற விதத்தில் தன்னை இசைவுபடுத்தி இந்தக் கல்விமுறையை நிலைத்திருக்கச் செய்த பெருமனிதர் அவர். அவரது தமிழியல் பங்களிப்புக்கள் பல தரப்பட்டவை.

நூலாக்கப்பணிகள், மீள்பதிப்புக்கள், ஆராய்ச்சிகள் மற்றும் அறிவுப்பரவலாக்கம் என நீண்ட அவரது தமிழியல் பணிகள் காலத்தால் என்றும் நினைவுகூரத்தக்கன.

பழகுவதற்கு இனிய பண்பாளனாகவும், நீறணிந்த நெற்றியனாகவும் என்றும் திகழ்ந்த அவர், சைவசித்தாந்த துறையில் நமது மண்ணில் இருந்த ஆழ்ந்த புலமைமிக்க பாரம்பரிய அறிவுக்குழாத்தின் கடைசித்தலைமுறையின் பிரதிநிதியாகக் கொள்ளத்தக்க தகைமையைக் கொண்டிருந்தார். சைவச் சொற்பொழிவுத் துறையிலும் முக்கிய கர்த்தாவாகவிருந்த அவரது குரல் வாண்மையும் குரல்கலாசாரமும் தனித்துவமானது. பௌராணிகர் மரபும், ஓதுவார் மரபும் நலிவுறும் தற்போதைய சூழலில் அத்துறை சார்ந்து இளையவர்களை ஆற்றுப்படுத்திய முன்னுதாரண மனிதர் அவர்.

இத்தகைய காலக்கடமைகளை கச்சிதமாக ஆற்றி நமது சைவத் தமிழின் இருப்புக்கு தக்கவை செய்த தகைமையாளர் சைவப்புலவர் சு.செல்லத்துரையின் மறைவு அவர் விசுவாசித்த திருமந்திர நாயகர் திருமூலரின் குருபூசைத் தினத்தில் நிகழ்ந்தமை இயற்கை அவருக்கு அளித்த பெரும் தகைமைச் சான்றிதழ். அமரரின் பிரிவு தமிழ் உலகில் இடைவெளி தரும் பிரிவு என்பதை உணர்வோம். அமரரது ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திப்பதுடன் ஈழத்தமிழ் மக்கள் சார்பில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் அஞ்சலிகளையும் தெரிவிக்கின்றோம்.
– என்றுள்ளது.

# வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கு நாளை முதல் பைஸர் தடுப்பூசி ஏற்றல்

கொவிட் தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் 18, 19 வயதுடைய அனைவருக்கும் பைஸர் கொவிட் தடுப்பூசி நாடளாவிய ரீதியில் ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி (வியாழக்கிழமை) முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், அடுத்த கட்டமாக வட மாகாணத்தில் 16, 17 வயதுடைய பாடசாலை மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி ஒருதடவை மாத்திரம் நாளை திங்கட்கிழமை முதல் வழங்கப்படவுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

மேலும் பாடசாலையைவிட்டு விலகிய 16 தொடக்கம் 19 வயதுடையவர்களுக்கு அவர்களுடைய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் சனிக்கிழமைகளில் இந்தத் தடுப்பூசி வழங்கப்படும்.

இந்தத் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதற்கு 16 தொடக்கம் 19 வயதுடைய அனைவரும் தமது தேசிய அடையாள அட்டையை அன்றைய தினத்தில் தமது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சமர்ப்பித்து தமது வயதை உறுதிப்படுத்திக்கொள்வது அவசியமாகும்.

தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு யாழ்.போதனா வைத்தியசாலையிலும், தெல்லிப்பழை, பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைகளிலும் பிரதி சனிக்கிழமைகளில் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அல்லது பாடசாலையில் அவ்வாறான நிலைமைகள் இருக்கின்றன என சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகள் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசியைப் பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் உள்ள பாடசாலைகளில் தரம் 11 மற்றும் தரம் 12 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் பைஸர் தடுப்பூசி வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரியில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமையும், திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் வியாழக்கிழமையும் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது என வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

எனவே நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் 11 மற்றும் தரம் 12 மாணவர்கள் தங்கள் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொண்டு, தங்களுக்கு உரிய நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுமாறும், அத்துடன் 18 வயதிற்கு குறைந்த மாணவர்கள் பெற்றோரால் சம்மதம் வழங்கும் விண்ணப்பத்தை அதிபரிடம் பெற்று, அதனைப் பூரணப்படுத்திக் கொண்டு சமுகமளிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.10.2021இல் வெளியிடப்பெற்றது.